

திருச்சுழி சட்டமன்றத் தொகுதி, நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், பூம்பிடாகை ஊராட்சி, கருவக்குடி கிராமத்தில் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட நியாய விலைக் கடை கட்டடத்தினை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் நரிக்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் கண்ணன், நரிக்குடி ஒன்றிய பெருந்தலைவர் காளீஸ்வரி சமயவேலு, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் ஜெயராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை மாவட்டம் கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒத்தக்கடை எஸ்.எஸ்.மஹாலில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் நடைபெற்ற முகாமை தொடங்கி வைத்து பொதுமக்கள் வழங்கிய மனுக்கள் மீது உடனடியாக பரிசீலனை செய்து அதற்கான ஆணைகளை வழங்கினார். உடன் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட ஊராட்சித் தலைவர் சூரியகலா கலாநிதி, கிழக்கு ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மணிமேகலை, ஊராட்சி மன்றத் தலைவர்கள் அண்ணாமலை, சரவணன், முருகேஸ்வரி ஆகியோர் உள்ளனர்.

ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் - தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# தூத்துக்குடியில் - கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## தூத்துக்குடி வடக்கு - தெற்கு மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர்கள் பி.கீதாஜீவன் - அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, ஜூலை 27-

ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கையில் தமிழ் நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து இன்று (27.7.2024) தூத்துக்குடி வடக்கு - தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர்கள் பி.கீதா ஜீவன், அனிதா ஆர். ராதா கிருஷ்ணன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்திய திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினை பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச்சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவிட வேண்டும். ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசு சமர்ப்பித்துள்ள மத்திய





பட்ஜெட் தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் தாராளமாக அள்ளிக் கொடுத்தும், தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தைக் கக்கிடும் வகையில் நிதி ஒதுக்காமல் இருப்பதும் ஏமாற்றம் அளிக்கிறது.

ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து இன்று (27.07.2024 - சனிக்கிழமை) மாவட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்திட வேண்டும் என தி.மு.க. தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

தி.மு.க. தலைமைக் கழகத்தின் அறிவிப்புக்கு இணங்க தூத்துக்குடி வடக்கு - தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 27.07.2024 - சனிகிழமை காலை 10.00 மணி அளவில் தூத்துக்குடி பாளை ரோடு சிதம்பர நகர் பேருந்து நிறுத்தம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தி.மு.கழக துணைப் பொதுச்செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற இருக்கிறது.

மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் கழக முன்னணியினர் முன்னிலையில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் தூத்துக்குடி வடக்கு - தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் அனைத்து கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழகத் தோழர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று பெருந்திரளாகக் கலந்து கொண்டு ஆர்பாட்டத்தை வெற்றியடையச் செய்திட கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஒன்றிய அரசைக் கண்டித்து - மு.தென்னவன் தலைமையில்

# சிவகங்கையில் இன்று ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, ஜூலை 27 -

சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-

கழக தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பின்படி ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு வஞ்சிக்கப்பட்டதை கண்டித்து தமிழ்



நாடு முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

அதன்படி சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் இன்று (27-ஆம் தேதி - சனிக்கிழமை) காலை 9.00 மணி அளவில் சிவகங்கை அரண்மனைவாசல் சண்முகராஜா கலையரங்கில் முன்னாள் அமைச்சரும், மாநில இலக்கிய அணி புரவலருமான மு.தென்னவன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்புஅணி நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் – ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# நெல்லையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## நெல்லை கிழக்கு - மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் - மத்திய மாவட்டச் செயலாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை!

நெல்லை, ஜூலை 27 -

ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கையில் தமிழ் நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து நெல்லை கிழக்கு மற்றும் நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (27.07.2024 - சனிக் கிழமை) காலை 10 மணி அளவில் திருநெல்வேலி சந்திப்பு இரயில் நிலையம் முன்பு நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது என கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினை பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச்சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன் நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கை பிரகடனமாகவே இருக்க வேண்டும்.

ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை ஒட்டுமொத்த இந்திய நாட்டிற்கான நிதி நிலை அறிக்கையாக தெரியவில்லை.மாறாக தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கிடும் வகையில் இந்த ஆண்டின் ஒன்றிய அரசு நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.

மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி, தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகள் ஆகியவற்றிற்கு நிதி வழங்கிட வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்து சில மாநிலங்களுக்கு மட்டும் பேரிடர் நிதி அள்ளி வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க ஒன்றிய அரசைக் கண்டித்து இன்று ( 27.7.2024 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் நெல்லை கிழக்கு,மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் திருநெல்வேலி சந்திப்பு இரயில் நிலையம் முன்பு மாவட்டக் கழக செயலாளர்கள் இரா. ஆவுடையப்பன், டி.பி.எம்.





மைதீன்கான் ஆகியோர் தலைமையில் நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, நிர்வாகிகள் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இம்மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நெல்லை கிழக்கு மற்றும் மத்திய மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் அனைத்து அமைப்புகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்று தமிழ்நாடு அரசை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுக்கு தங்கள் கண்டனத்தை பதிவு செய்திட திரளாக வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூட்டாக அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளனர்.

பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து மதுரை வடக்கு - தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# வாடிப்பட்டியில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி - சேடப்பட்டி மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை, ஜூலை 27 -

தலைமை கழக அறிவிப்புக்கு இணங்க தமிழ் நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து இன்று 27ஆம் தேதி மதுரை வடக்கு மற்றும் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாடிப்பட்டியில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்றும், இதில் கழகத்தினர் பெருந்திரளாக அலைகடலென திரண்டு வந்து பங்கேற்குமாறும் மாவட்டச் செயலாளர்கள் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, சேடப்பட்டி மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். அதன் விபரம் வருமாறு:-

தொடர்ந்து தமிழ் நாட்டை வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசு நிதி நிலை அறிக்கையிலும் தமது வஞ்சத்தை காட்டி உள்ளது. ஒரு நாட்டின் நிதிநிலை





அறிக்கை சமச்சீராக இந்தியா முழுவதிலும் உள்ள அனைத்து மாநிலங்கள் பயன்பெறும் வகையில் அமைய வேண்டும், பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசு தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை அள்ளிக் கொடுத்துள்ளது

நாட்டின் வளர்ச்சிக்கு மாபெரும் பங்கு வகிக்கும் தமிழ்நாடு போன்ற சில மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கி வருகிறது. மெட்ரோ ரயில் திட்டம் மற்றும் தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு கோரி பலமுறை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோரிக்கை வைத்தும் எந்த பயனும் இல்லை.

இப்படி தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வருவது பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசின் மக்கள் விரோத போக்காகும். ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையின் வஞ்சத்தை கண்டிக்கும் வகையில் தலைமை கழகத்தின் அறிவிப்புக்கு இணங்க இன்று (27.07.2024 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் மதுரை வடக்கு, மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாடிப்பட்டியில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இதில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஊராட்சி செயலாளர்கள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என பெரும் திரளாக அனைவரும் அலைகடலென திரண்டு வருமாறு மாவட்ட செயலாளர்கள் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, சேடப்பட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் - தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# கன்னியாகுமரி மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## கிழக்கு மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் அறிக்கை!

கன்னியாகுமரி, ஜூலை 27 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து கன்னியாகுமரி மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று



(27.7.2024 - சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு, நாகர்கோவில், வடசேரி, அறிஞர் அண்ணா விளையாட்டு மைதானம் முன்பு வைத்து நடைபெறவுள்ளது.


ஆகவே இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொது மக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தை சிறப்பிக்க வேண்டும் என கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சா. இராமமூர்த்தி

**ஜூலை 27 (2013)**



**இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**ஒருங்கிணைந்த சென்னை மாவட்டத்தில் இருபது ஆண்டுகள் வட்டக் கழகச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில் கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு அரும்பாடுபட்டவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**